DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.313/2023

**prosecution witness: LW10 as PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோட்டைச்சாமி | தொழில் | : | சார்பு ஆய்வாளர், பாம்பன் காவல்நிலையம் |
| த/பெ. | : | முனியாண்டி | வயது | : | 40 |
| கிராமம் | : | பாம்பன் | சமயம் | : | |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**<u>10.06.2025</u>**

(1, 2 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்சமயம் சார்பு ஆய்வாளராக பாம்பன் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணையை உதவி ஆய்வாளர் வசந்த் குமார் என்பவர் மேற்கொண்டுள்ளார். நான் 11.05.2023ம் தேதியன்று வழக்கு கோப்பை பெற்றுக்கொண்டு வழக்கு சொத்து 3 கிராம் ஒரு தங்க தோடு, 6 கிராம் எடையுள்ள தங்க மோதிரம், lenova laptop ஆகியவற்றை படிவம்-95 மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR.No.47/2023 பெற்றேன். அந்த **படிவம்-95 அ.சா.ஆ. 5 ஆகும்.** இறுதியாக எனது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள். 457, 380 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கில் 4 கிராம் எடையுள்ள தங்க தோடும், 2 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் காணாமல் போனதாக சார்பு ஆய்வாளர் வசந்தகுமார் என்வசம் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. குற்ற இறுதி அறிக்கையில் புகார்தாரர் மானமதுரைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது தான் சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் வெளியூர் சென்றுவிட்டு வரும்போது என்று சொல்லியுள்ளேன். குற்ற இறுதிஅறிக்கையில் சம்பவம் நடைபெற்ற வீட்டிற்கு பின்பக்கம் தான் எதிரிகள் உள்ளே புகுந்துள்ளார்கள் என்றால் சரிதான். திருடுபோன பொருட்களை பற்றி முறையாக விசாரணை செய்யாமல், சார்பு ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் பொருட்களை ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த சம்பவத்திற்கு சம்பந்தம் இருக்கிறதா என்பதை அறியாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/-S.B. Sujith, B.A.,B.L.,(Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.